★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 35630

நம் நாடு

திராவிட தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 4} சென்னை: ஐப்பசி 8உ புதன் (24—10—56) ★ ★ வெளியீடு: ஐப்பசி 9உ வியாழன் (25—10—56) {இதழ் 116

ஆடு விற்கும் விலையில் பெண்கள் விற்கப்படுகின்றனராம்

ஐதராபாத், அக். 22—

சில ரூபாய்களுக்கு—ஒரு ஆடு விற்கும் விலைக்குப் பெண்கள் காஷ்மீரில் 'விற்கப்'படுகின்றனராம்!

5 அல்லது 6 வயதுப் பெண்கள்கூட அங்கே, சில ரூபாய்க்காகப் பெற்றோரால், மணமுடித்துத் தரப்படுகின்றனராம்! இதனால் பலர் பலவித நோய்களுக்கு ஆளாகித் துன்புறுகின்றனராம்!

பெண்களை வைத்திருக்கும் பலரிடமிருந்து சிறுதொகைகளைத் தந்து, சமூகநல போர்டு பல பெண்களை மீட்டிருக்கிறதாம்!

இந்தத் தகவலை அண்மையில் காஷ்மீர் சென்று திரும்பிய திருமதி துர்காபாய் தேஷ்முக் இங்கு கூறியிருக்கிறார்.

திராவிட நாடு இலட்சியமும்-தேர்தல் ஈடுபாடும்

அண்ணா கருத்துரை

ஒரு நாடு விடுதலை பெறுவதற்குரிய வழிகளை ஆராய்ந்துரைக்கிறார்

சென்னை-திருவல்லிக்கேணியில் 20-10-56-ல் நடைபெற்ற தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் அண்ணா அவர்கள் ஆற்றிய கருத்துரையின் இரண்டாவது பகுதி இங்கு தரப்படுகிறது:—

"காங்கிரசின் இன்றைய நிலை என்ன? இன்று காங்கிரசார் எனப்படுபவர்கள் எப்படிப்பட்டவர்கள்?

"காங்கிரஸ்காரர் என்றால் கதர் கட்டியிருக்க வேண்டும்; இன்னும் கொஞ்சம் தரமானவர் என்றால் வீட்டில் தினம் இராட்டை சுற்ற வேண்டும்; இன்னும் தரமானவரானால் சிறைக் கொடுமையை அனுபவித்திருக்க வேண்டும்; இன்னும் தரமானால் பல தியாகங்கள் புரிந்திருக்க வேண்டும்

"இப்படிப்பட்ட தரமான காங்கிரசார் இன்று காங்கிரசில் இருக்கிறார்களா என்றால், இல்லையே!

"சமயம், சந்தர்ப்பம் அறிந்து நடந்துகொள்ளும் தரம் மட்டும் பெற்ற இராமசாமி படையாச்சிகள்தானே காங்கிரசில் இருக்கின்றனர்? 'கள்ளமார்க்கெட்'டில் நல்ல வேட்டையாடிய பெரும் முதலாளிகள் எல்லாம் காங்கிரசில்தானே இருக்கின்றனர்?

"இத்தனை பலவீனமுடையதாயிருந்தாலும், காங்கிரஸ் தேர்தலில் வெற்றி பெறுவதற்கு, எதிர்க்கட்சிகளிடை ஒன்றுபட்ட மனப்போக்கு இல்லை என்பதும் ஒரு காரணமல்லவா? அதனால்தான், நாம் எதிர்க்கட்சிகளிடம் நல்லெண்ணம் வேண்டும் என்று கூறுகிறோம்.

"ஜனநாயகம் பிழைக்க பலமான எதிர்க்கட்சி ஒன்று வேண்டும்—என்று எல்லோரும் ஒப்புகிறார்கள்.

"எனவே, நல்லாட்சி நிலவ நல்லதோர் எதிர்க்கட்சி உருவாக வேண்டும்.

"இவர்கள் எதிர்க்கட்சியாக இருக்க இலாயக்கில்லை—என்று சிலர் கூறக்கூடும்.

"தி. மு. க. இலாயக்கில்லை; கம்யூனிஸ்டு கட்சி சரியில்லை; சோஷலிஸ்டுக் கட்சி பிரயோசனம் இல்லை; 'இவர்கள் எல்லாம் வான்கோழிகள்,' என்று சிலர் பேசுவதானால், மயிலாகத் தங்களைக் கருதிக்கொண்டிருப்பவர்களேனும் ஆட்டம் ஆடட்டும்!

வான்கோழி எனக் கேலி பேசுவோர் புள்ளிக்கலாபம் விரித்து ஆடட்டுமே!

"இவர்கள் வான்கோழிகள்; எனவே, இவர்கள் ஆட்டம் சரியில்லை,' என்று கூறும் மயில்கள் தங்கள் புள்ளிக்கலாபத்தை விரித்து ஆடட்டும்!

"வான் கோழியும் ஆடக்கூடாது—மயிலும் ஆடாது சும்மா இருக்கும் என்றால், நாட்டிற்கு நல்ல ஆட்டம் கிடைக்காமற்போய்விடும்!

"எதிர்க்கட்சி தேவை என்று பலரும் பேசுகிறார்கள் என்பதினால் அல்ல—அதன் அவசியத்தை நாமே உணர்ந்திருப்பதினால்தான், தேர்தலில் ஈடுபடுகிறோம்.

"இன்னும் சிலர், 'சட்டசபைக்

நம்மவர் என்பதால் நாடு பெற்ற பலன் என்ன?

"நல்ல பலமான எதிர்க் கட்சி இல்லாவிட்டால் நாட்டிற்கு நல்லாட்சி கிடைக்காது; நல்லாட்சி இல்லாவிட்டால், ஆட்சியிலிருப்பவர்கள் நம்மவர்கள் என்பதினால் மட்டும் மக்களுக்குத் திருப்தி ஏற்பட்டுவிட முடியாது!

"ஆட்சி நல்லதாயில்லாவிடின், ஆளுபவர் நம்மவராயிருந்து மட்டும் என்ன பயன்?

"வெள்ளையர் நம்மவர் அல்ல என்பதினாலே மட்டும் நாம், அவர்கள் ஆட்சி கூடாதெனக் கூறவில்லை; அவர்கள் பொல்லாதவர்கள் என்பதினாலேயும்தான், நாம் அவர்களை எதிர்த்தோம்!

குப் போய் திராவிட நாடு பெற முடியுமா?' என்று கேட்கிறார்கள்

"திராவிட நாடு பெறுவதற்குரிய வழிகள்தான் என்ன?

"இன்று வளர்ந்துள்ள உலகச் சூழ்நிலைகளில், ஒரு நாடு விடுதலை பெறுவது எங்ஙனம்?

"ஆதிக்கபுரியினர், தாங்களாகவே—இனி இவர்கள் நமக்குத் தேவையில்லை—என்று அடிமையான ஒரு நாட்டுக்கு விடுதலை வழங்கலாம்.

"இனி இவர்களைக் கட்டி வைத்து ஆள முடியாது—என்ற நிலையை உருவாக்குவதின் மூலம், ஆதிக்கக்காரர்கள், விடுதலை தருமாறு செய்யலாம்.

"ஆதிக்கக்காரர்களைப் போலவே சகல துறைகளிலும் அடிமை நாட்டவர் வளர்ந்துவிட்டால், 'தோளுக்கு மேல் வளர்ந்தால் தோழன்' என்பார்களே — அதுபோல வளர்ந்துவிட்டால், 'இனி இவர்களை ஏமாற்றி ஆளமுடியாது' என்று ஆதிக்கபுரியினர் ஓடிப் போவார்கள்!

"ஆளுகிற 'இடங்களை' எல்லாம் கைப்பற்றிக் கொண்டு, அங்கிருந்து விடுதலை முழக்கம் எழுப்புவதின் மூலம் விடுதலை பெறலாம்.

"உணர்ச்சி பெருக்கெடுத்த மக்கள், சட்டத்தை மீறுவது—வரி கொடாதிருப்பது போன்ற நடவடிக்கைகளால் விடுதலை பெறலாம்.

"அந்த வழிகள் பயன்தராவிட்டால், வெளிநாட்டான் உதவியைப் பெற்று பலாத்காரப் புரட்சியின் மூலம் ஆதிக்கபுரியினரைத் துரத்தி விடுதலை பெறலாம்.

"இவற்றுள் முதல் வழி நடைபெற்றதே இல்லை; எனவே நாமும், நடைபெறும் என்று எதிர்பார்க்கவில்லை.

"கடைசி வழி, நமக்கு ஆகாதது—உடன்படாதது—நாம் விரும்பாதது—வெறுப்பது; எனவே, இடையில் உள்ள வழிகளில் ஒன்று ஆளும் இடங்களைக் கைப்பற்றுவது! அந்த வழியைத்தான் தி. மு. கழகம் மேற்கொள்ளுகிறது—தேர்தலில் ஈடுபடுவதின் மூலமாக!

"இந்த வாய்ப்பைத் தருமாறுதான், நாம் மக்களிடம் அனுமதி கோருகிறோம்—'தேர்தலில் ஈடுபடுகிறோம்' என்ற அறிவிப்பின் மூலம்!"

[நாளையும் வரும்]

'இராமாயண'த்திற்குத் தடை!

புதுடில்லி, அக். 23—

ஆப்ரிமெனன் என்பவர் எழுதிய 'இராமாயணம்' என்ற அமெரிக்கப் புத்தகத்தை இந்தியாவுக்குள் கொண்டுவரக்கூடாதென இந்திய அரசாங்கம் தடை விதித்துள்ளது.

தேர்தல்குழுவினர் தலைநகர் திரும்பினர்

'அறிவக'த்தில் அண்ணாவுடன் உரையாடல்

தஞ்சை, தென் ஆற்காடு மாவட்ட சுற்றுப் பயண விவரங்கள்

தஞ்சை மாவட்டத்தில் தேர்தல் ஆய்வுக் குழுவின் விசாரணை 22—10—56 காலை 11-30 மணிக்குத் துவங்கி இரவு 3-30 மணிக்கு முடிவுற்றது. ஏராளமான தோழர்கள் குழுவினரிடம் சாட்சியமளித்தனர். குழுவினர் விசாரணை நடத்திய ஒவ்வொரு இடத்திலும், பொதுமக்களிடையே மிகுந்த உற்சாகமும் கழகத் தோழர்களிடையே உணர்ச்சியும் காணப்பட்டன.

பட்டுக்கோட்டை:

தேர்தல் ஆய்வுக் குழுவினரான தோழர்கள் இரா. நெடுஞ்செழியன், ஈ. வெ. கி. சம்பத், என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன் ஆகிய நால்வரும் பட்டுக்கோட்டைக்கு 22—10—56 காலை 11-30 மணிக்கு வந்து சேர்ந்தனர்.

டவுன் 'டிராவலர்ஸ் பங்களா'வில் ஏராளமான கழகப் பிரதிநிதிகளும் பொதுமக்களும் திரண்டிருந்தனர்.

மாவட்டச் செயலாளர் என். எஸ். இளங்கோ, துணைச்செயலாளர் ப. நாராயணசாமி, சிவராம கிருஷ்ணன், உள்ளூர் செயலாளர் ஆகியோர் ஆய்வுக் குழுவினரை வரவேற்றனர்.

தஞ்சை மாவட்டக் கிளை, நகரக் கிளை ஆகியவைகளின் சார்பில் ஆய்வுக் குழுவினருக்கு மலர்மாலைகள் அணிவிக்கப்பட்டன.

பின்னர் ஆய்வுக் குழுவினர் பிரத்தியேக இடத்தில் விசாரணையைத் துவங்கினர். அறந்தாங்கி, அதிராம்பட்டினம், பட்டுக்கோட்டை, மன்னார்குடி, திருத்துறைப்பூண்டி ஆகிய தொகுதிகளிலிருந்து வந்திருந்த கழகப் பிரதிநிதிகள், பிரமுகர்கள் ஆய்வுக் குழுவினரிடம் விவரம் அறிவித்தனர். இவ்விடம் பிற்பகல் 3-30 மணிக்கு ஆய்வுக் குழுவினர் பணி முடிவுற்றது. பின்னர் அவ்விடமிருந்து தஞ்சை புறப்பட்டுச் சென்றனர்.

தஞ்சை நகரில்:

தேர்தல் ஆய்வுக் குழுவினர் மாலை 6 மணிக்கு தஞ்சை வந்து சேர்ந்தனர். கீழவாசலிலுள்ள பொது மாளிகையொன்றில் விசாரணைக் குழுவின் பணி துவக்கப்பெற்றது.

தோழர்கள் கே. கே. நீலமேகம், பெத்தண்ணன், ஏ. வி. பதி, நகரச் செயலாளர் பட்டு, துணைச் செயலாளர் ஜேம்ஸ், டி. கே. சீனிவாசன் ஆகியோர் ஆய்வுக் குழுவினரை மலர் மாலைகள் அணிவித்து வரவேற்றனர்.

பின்னர் அங்கு திரண்டிருந்த கழகப் பிரதிநிதிகள், பொதுமக்கள் ஆகியோரடங்கிய கூட்டத்தில் பொதுச்செயலாளரும் துணைப் பொதுச்செயலாளரும் ஆய்வுக்குழுவின் பணியினையும், தேர்தல் நிதிக்கு அனைவரும் உதவி செய்ய வேண்டிய விவரங்களையும் எடுத்துக்கூறினர். பிறகு ஆய்வுக் குழுவின் விசாரணை துவக்கப்பட்டது.

குடந்தை, பாபநாசம், கந்தர்வக்கோட்டை, திருவையாறு, தஞ்சை ஆகிய தொகுதிகளிலிருந்து வந்திருந்த கழகப் பிரதிநிதிகளைத் தொகுதிவாரியாக மாவட்டச் செயலாளர் என். எஸ். இளங்கோ விசைக்கிரமமாக அனுப்பிவைத்தார். இங்கு விசாரணை இரவு 9-30 மணியளவில் முடிவுற்றது.

மாயவரத்தில்:

22—10—56 இரவு 12 மணிக்கு தேர்தல் ஆய்வுக் குழுவினர் மாயவரம் வந்து சேர்ந்தனர். நகர தி. மு. கழகக் கிளையின் சார்பில் என். கிட்டப்பா, மற்றும் நிர்வாகிகள், மலர் மாலைகள் அணிவித்து வரவேற்றனர். சீர்காழி, நாகை, திருவாரூர், நன்னிலம், மாயவரம் ஆகிய தொகுதிகளிலிருந்து வந்திருந்த ஏராளமான கழகப் பிரதிநிதிகள் ஆய்வுக் குழுவினர் கேட்ட கேள்விகளுக்குத் தக்க விவரம் கூறினர். இங்கு இரவு 3-30 மணிக்கு ஆய்வுக் குழுவின் விசாரணை முடிவுற்றது. மறுநாள் காலை 8-30 மணிக்கு ஆய்வுக் குழுவினர் மாயவரத்திலிருந்து தென் ஆற்காடு மாவட்டத்திற்குப் புறப்பட்டனர். மாவட்டச் செயலாளர் என். எஸ். இளங்கோ, நகரச் செயலாளர் கிட்டப்பா, மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்து வழி அனுப்பினர்.

கடலூரில்:

ஆய்வுக் குழுவினரிடம் 500-க்கு மேற்பட்ட தோழர்கள் சாட்சியம் அளித்தனர்

—23—10—56 காலை 11 மணிக்கு தேர்தல் ஆய்வுக் குழுவினரான பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், என். வி. நடராசன், ஈ. வெ. கி. சம்பத், கே. ஏ. மதியழ

(4-ம் பக்கம் பார்க்க)

அண்ணா வரவேற்றார்

சுற்றுப் பயணத்தை முடித்துக்கொண்டு சென்னை திரும்பிய தேர்தல் ஆய்வுக் குழுவினரை அண்ணா அவர்களும், ஏராளமான கழகத் தோழர்களும், முக்கிய உறுப்பினர்களும் 'அறிவக'த்தில் வரவேற்றனர்.

தாங்கள் கண்டு கேட்டு அறிந்து வந்துள்ள தேர்தல் சூழ்நிலைகள் குறித்துக் குழுவினர், அண்ணா அவர்களிடம் தனியாக உரையாடிக் கொண்டிருக்கின்றனர்.

நன்றி அறிவிப்பு

தேர்தல் ஆய்வுக்குழுவினரின் சுற்றுப்பயணத்தின்போது, ஆய்வுக் குழுக் கூட்டங்கள் சிறப்பாகவும் வெற்றிகரமாகவும் நடைபெறுவதற்கு ஒத்துழைப்புத் தந்த மாவட்டச் செயலாளர்கள், கிளைக் கழகச் செயலாளர்கள், கழகப்பிரமுகர்கள், ஆதரவாளர்கள் ஆகியோருக்கும், ஆங்காங்கு வரவேற்பு அளித்து உபசரித்த பொதுமக்களுக்கும் எங்களின் மனமுவந்த நன்றியறிதலையும் வணக்கத்தையும் இதன்மூலம் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

இரா. நெடுஞ்செழியன்
ஈ. வெ. கி. சம்பத்
என். வி. நடராசன்
கே. ஏ. மதியழகன்

நம் நாடு

சென்னை 24-10-'56 புதன்

ஆபத்தான போக்கு

[I]

இந்தி மொழியைப் பேச்சு வழக்கில் கொண்டில்லாத மக்கள்மீது இந்தி மொழி வலுவில் திணிக்கப்பட மாட்டாது என, குடியரசுத் தலைவர் இராசேந்திரர் முதல் குட்டித் தலைவர் காமராசர்வரை, அறுதலிக்கு ஆறுதல் கூறுவதுபோல் கூறிவருகின்றனர். அவ்வாறு ஆறுதல் கூறிவரும் அதே நேரத்தில், இந்திய அரசியல் சட்ட விதியினைச் சுட்டிக்காட்டி, இந்திதான் இந்தியப் பேரரசின் ஆட்சிமொழியாகும் எனத் திட்டவட்டமாகவும், அதுதான் இந்தியத் துணைக்கண்டத்தின் பொது மொழியாகும் என இழுத்தாற்போலும் இந்தியின் எதிர்காலத்தை வலியுறுத்திவருகின்றனர்.

இந்தியத் துணைக் கண்டத்து மக்களுக்கென ஒரு பொது மொழி இல்லாதிருப்பது எளனத்திற்குரியது என்றும், இந்தியாவின் ஒற்றுமைக்கு ஒரு பொது மொழி கண்டிப்பாக இருந்தே ஆக வேண்டும் என்றும், அதற்கு ஏற்றதாக பெரும்பான்மையினரால் பேசப்பட்டுவரும் மொழியாக உள்ள இந்தி மொழியே தகுதி வாய்ந்தது என்றும் இந்தி ஆதரவாளர்கள், இதுவரை நியாயம் பேசிவந்துள்ளனர். ஆனல் இந்தி மொழியோ, இந்தியத் துணைக் கண்டத்தின் பொதுமொழி ஆகும் அளவிற்கு வளமுள்ள மொழியாக இருக்கவில்லை; இன்னும் சில ஆண்டுகாலத்திற்குள்ளாக அம்மொழியை, ஒரு ஆட்சிமொழிக்குத் தகுதியுள்ளதாக ஆக்கக் கூடுமா என்பதும் நிச்சயமில்லை.

பெரும்பான்மையினரின் பேச்சு மொழியாக இருந்து வருகிறது எனக் கூறப்பட்டு வரும் ஒரு காரணத்திற்காக, வளமற்ற இந்தி மொழியை இந்தியப் பேரரசின் ஆட்சி மொழியாக ஏற்றுக்கொள்ள முன் வந்தவர்கள் அதையே பிறரும் ஏற்றுக்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கிறவர்கள், இந்தியத் துணைக்கண்டத்தில் வழக்கில் உள்ள மொழிகளில் இந்தியைவிட வளம் கூடியதாக உள்ள ஏதாவது ஒரு மொழியை, இந்திக்கு மாற்ருகப் பொதுமொழியாக ஒப்புக்கொள்ள ஏன் விரும்பக் கூடாது? அவ்வாறு விரும்பாததில் உள்ள இரகசியம்தான் என்ன?

பல்லோர் பேசி வருகிருர்கள் என்ற ஒரு நியாயம் வளமற்ற இந்திக்குச் சாதகமாக இருக்கிறது என்ருல், வளமற்றுக் கிடப்பது இந்திக்கு ஒரு பாதகமாக இருந்து வருகிறது என்பதை அவராலும் மறந்துவிட முடியாது.

வளமுள்ள வேறு சில மொழிகளும் பொது மொழிகளாக ஒப்புக்கொள்ளப்படுவதற்கு, அவைகளினுடைய வளமே அவ்வளவுதான் அவைகளுக்குச் சாதகமானதாக இருந்தபோதிலும், அம்மொழிகளைப் பேசுவோர் இந்தி மொழிக்கிருப்பதுபோல் பல்லோராக இல்லை என்ற பாதகமான ஒரு நியாயத்தைக் காட்டி, வளமுள்ள மற்ற மொழிகளில் ஏதாவது ஒன்றைப் பொது மொழியாக ஏற்றுக்கொள்ள முடியாது எனக் கூறப்படுகிறது.

மொழியைப் பொறுத்தவரையில், குறிப்பிட்ட ஒரு மொழி பெற்றுள்ள பயன்படும் தரத்தைக் கொண்டுதான், அம்மொழியைப் பொது மொழியாக்குவதா கூடாதா என்பதில் முடிவுகட்ட முந்தவேண்டும். அதுதான் நேர்மையுமாகும்.

அந்த நேர்மையான வழியை விட்டு, வளமற்ற இந்தி மொழியை அதிகப்படியானவர் பேசிவருகின்றனர் என்பதற்காகப் பொதுமொழியாக இந்தியப் பேரரசு ஏற்றுக்கொண்டிருப்பது பொருத்தமற்றதாகும். ஏதோ, இந்தியைத் தாய்மொழியாகக் கொண்ட உத்திரப்பிரதேசத்தாரையும், பீகார் மொழிவெறியர்களையும் திருப்திபடுத்தும் நோக்குடன் இந்தி மொழி ஒப்புக்கொள்ளப்பட்டதாக இருக்கிறதே அல்லாது வேறு ஒன்றுமில்லை.

இந்தியத் துணைக்கண்டத்து மொழிகளில் வேறு ஒரு வளமுள்ள மொழியைப் பொது மொழியாக ஏற்றுக்கொள்ளும் பட்சத்தில், அதனை தற்காலத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் அளவிற்குத் தகுதியுடையதாக்குவதற்கு எடுத்துக்கொள்ளப்படும் முயற்சி, அவ்வகையில் இந்தி மொழியைத் தகுதியுள்ளதாக்குவதற்கு எடுத்துக் கொள்ளப்பட்டுவரும் முயற்சியைவிடக் குறைவானதாகத்தான் இருக்கமுடியும். இதில் ஐயமேற்பட எவருக்கும் நியாயமில்லை.

பொதுமொழியாக ஒப்புக் கொள்ளப்பட்டுள்ள இந்தி, பெரும்பான்மையினரால் மட்டும்தான் பேசப்பட்டு வரப்படுகிறதே அல்லாது, இந்தியத் துணைக் கண்டத்து மக்கள் அனைவராலும் பேசப்பட்டு வரும் மொழியாக இருக்கவில்லை. அனைவரும் பேசும் மொழியாக ஆக்கவேண்டிய வேலை இந்தி மொழி விஷயத்திலும் இருக்கத்தான் இருக்கிறது.

இந்தியைவிடக் குறைந்த எண்ணிக்கையினரால் பேசப்பட்டு வரும் வேறு ஒரு வளமுள்ள மொழியில் அனைவருக்கும் இனித் தொடர்பு ஏற்படுத்த வேண்டிய கட்டாயம், இந்தி மொழிக்கு இருந்துவருவது போன்றேதான் இருந்து வருகிறது. இந்தி மொழிக்கு இருந்துவருவதைவிட, வளமுள்ள மற்ற மொழிகளுக்கு மக்கள் அனைவருடைய தொடர்பும் ஏற்படுத்துவது என்பதில் மேலும் கொஞ்சம் உழைப்பு தேவைப்படும் என்பதைத் தவிர வேறு ஒரு தொல்லையும் இல்லை.

ஆராய்ந்தால், இந்தத் தொல்லையும், இந்தி மொழியைப் பரப்புவதில் இருப்பதுபோல் இருக்காது என்பதை உணர்ந்து கொள்ளலாம். மொழிக்குரிய வளம், அதைப் பரப்புவதில் ஏற்படக்கூடிய சங்கடத்தைக் கணிசமாகக் குறைத்துவிடக் கூடும் என்பது மறுக்கக் கூடியதன்று.

தெற்றுவாயனைக் கற்க வைப்பதில் உள்ள சிரமத்திற்கும், திருத்தமாகப் பேசும் திறம் படைத்தவனைக் கற்கவைப்பதில் இருக்கும் சிரமத்திற்கும் உள்ள வித்தியாசம் போன்றதுதான், வளமற்ற இந்தியை ஒரே நேரத்தில் வளமுள்ளதாக ஆக்கவும் பரப்பவும் செய்வது என்பதற்கும் வளமுள்ள ஒரு மொழியைப் பரப்பமட்டுமே செய்வது என்பதற்கும் உள்ள வித்தியாசமாகும்.

'தராசு முனை நீதி வேண்டும்'

'இந்தி பிரமாதம் என்பது வெறும் ஆசையின் நினைப்பு'

'இந்தி தெரியாத மக்களை மூலையில் தள்ளிவிடாதீர்'

ஆச்சாரியார் மீண்டும் விளக்கம் தருகிருர்

"இந்தி தெரியாத மக்களை ஒரு மூலையில் தள்ளிவிடுவதோ, அல்லது அதிர்ஷ்டவசமாக இந்தி பேசும் பிரதேசங்களிலுள்ளவர்களுக்கு மற்றவர்களைவிட உயர்வான பதவிகள் கொடுத்துத், தகுதிக்கு மேற்பட்ட சலுகைகள் தருவதோ நியாயமாகாது.

"மத்திய சர்க்கார் என்பது தராசு முனை போல நியாயமான அரசாங்கமாக இருக்க வேண்டும். தராசின் ஒரு தட்டு உயர்ந்தும், மற்றொரு தட்டு இறங்கியும் இருப்பதாக இருக்கக்கூடாது; அநீதிகளுக்கு ஒரு கருவியாகவும் அது இருக்கக் கூடாது.

"இதுவரையில் நிறம்பட எல்லோருக்கும் பயன்பட்டிருக்கும் மொழியே இனியும் மாற்று மொழியாகத்தொடர்ந்து இருக்க வேண்டும்.

"இந்தியைக் கற்றுக்கொள்ளத் தூண்டுவதற்காக அநீதியை இழைக்க ஆரம்பிக்கவேண்டும் என்ற அவசியம் இல்லை.

"கல்வி என்பது படிப்படியானதும், நியாயமானதுமான சாதனைக்குத் துணை புரிவதாக இருக்கவேண்டும். ஆனல் ஒரு பகுதியினருக்குப் பெரும் அநீதியையும், மற்றொரு பகுதியினருக்கு தகுதியற்ற வசதிகளையும் கொடுக்கும் கருவியாகக் கல்வி இருக்கக்கூடாது.

"இப்போது ஆங்கிலம் பரவியுள்ள அளவிற்கு இந்தியும் பரவ வேண்டுமானல், இரண்டு மூன்று தலைமுறை இந்தியைப் போதித்தால்தான் முடியும். இந்தியையே தனி அரசாங்க மொழியாக்க வேண்டுமென்று சொல்லுவதில் நியாயம் இருக்கவேண்டுமானல், இப்படி இரண்டு மூன்று தலைமுறைகளுக்கு அதைப் போதிப்பது அவசியமாகும்.

"இப்போது ஆங்கிலம் செய்து கொண்டிருக்கும் திறமையான வேலையை இந்தி செய்யவேண்டுமானல், அந்த மொழியை அதற்கேற்ப உருவாக்குவதற்கும் அவகாசம் வேண்டும்.

"இந்தி இப்போதே பிரமாதமாக இருக்கிறது என்று கூறுவது, ஆசை காரணமாக ஏற்படும் நினைப்பே ஒழிய உண்மை நிலையல்ல.

"இந்திபேசப்படாத பகுதிகளில் உள்ளவர்கள், அனுபவிக்க வேண்டிய பிரதிகூலங்களுடன்வேதனையையும் சேர்த்து சுமத்தாமல் இருக்கவேண்டும்.

"மக்களின் சம்மதம்தான் குடியரசின் அஸ்திவாரம்; அதாவது, நீதியையும் அன்பையும் அது நம்பியிருக்கிறது; சர்வாதிகாரத்தையோ, பலவந்தத்தையோ நம்பி இருக்கவில்லை.

"நல்ல காரியங்களைச் செய்வதற்குப் பலவந்தத்தையும் வேதனையையும் நம்புவது சுலபம்தான்; ஆனல் அது புத்திசாலித்தனமாகாது. நிதானத்துடன் மெதுவாகப் போவதே நிச்சயமானதும், நல்லதுமான வழியாகும்."

அப்படியா சேதி!

புதுடில்லி, அக். 22—

அடுத்த நிதி ஆண்டில் வானெலி நிலைய அபிவிருத்திக்காக ரூ 9-கோடி செலவிட உத்தேசிக்கப்பட்டுள்ளதாம்.

அனைவரையும் கவரும் விஷயங்களும் இன்னிசையும் அடங்கிய அனைத்திந்திய நிகழ்ச்சிகளை வானெலி ஒலிபரப்புமென்றும், நாள் முழுவதும் நாடு முழுவதிலும் மக்கள் அதனைக் கேட்டு ரசிக்கலாம் என்றும் டில்லி ஆட்சியின் விளம்பர அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இனி வானெலி, வெறும் கேளிக்கைக் கருவியாக மட்டுமின்றி, கலாச்சாரத்தையும் கல்வியையும் பரப்பும் சாதனமாகப் பயன்படுத்தப்படுமாம்.

கவர்னர்கள் நியமனம்

மனம்போன போக்கில் டெல்லி செல்கிறது

"புதுடில்லியிலிருந்து வெளியிடப்பட்ட அரசாங்கச் செய்தியொன்று, புதிய கவர்னர்களின் பெயர்களை அறிவித்திருக்கிறது. அவற்றுள் சிலவற்றைப் பார்த்தால், எக்காரணம் பற்றி அந்நிய மனங்கள் செய்யப்பட்டுள்ளன என்பது விளங்கவேயில்லை.

"காரணமோ, கொள்கையோ இல்லாமல், மனம்போன போக்கின்படி, சில நியமனங்கள் செய்யப்பட்டுள்ளன என்று கூறுவது மிகையாகாது.

"அரசியல் ஆழ்ந்த அனுபவம் பெற்று, கட்சிப் போராட்டச் சூழ்நிலையிலிருந்து விலகியிருப்பவர்களுக்குக் கிடைக்கவேண்டிய பதவிகள், கட்சித் தலைவர்களுக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

"......கவர்னர் பதவிக்குப் பொறுப்பான பெருங்கடமைகள் இல்லையென்றுலும். பொறுப்பான கொள்கைகளுடன் நியமனங்கள் செய்யப்பட்டிருந்தால் நலமாயிருக்கும்."

—'தமிழ் நாடு' 20—10—56

சிறுவாணியில் பெரிய அணை

ரூ. $1\frac{1}{2}$ கோடி செலவில் விரிவாக்கப்படுகிறதாம்

கோவை, அக். 23—

சுமார் ரூ $1\frac{1}{2}$ கோடி செலவில் கோவையின் தற்போதைய குடிதண்ணீர் திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது. இதற்கான நீர்த் தேக்கத்தை சிறுவாணியில் அமைப்பதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

தற்போது நகருக்கு குடிநீர் விநியோகிக்கும் சிறுவாணி அணைக்கு 100 அடிக்குக் கீழ் 592 அடி நீளமும், 138 அடி உயரமும் உள்ள புதிய அணை அமைக்கப்படும்.

இப்போது தினமும் 40 இலட்சம் காலன் தண்ணீர் கிடைக்கிறது. இந்தப் புதிய நீர்த் தேக்கத் திட்டம் நிறைவேறினல் நகருக்கு தினமும் 125 இலட்சம் காலன் தண்ணீர் கிடைக்கும்; எனவே, நகரத்திற்கு அப்பாலுள்ள சில பகுதிகளுக்கும் தண்ணீர் வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

அஞ்ச வேண்டாமாம்!

உணவுப் பொருள் விலை ஏறுவதுவழக்கமானதுதானும்

பெங்களூர், அக். 20—

தென்னிந்தியாவில உணவுத் தானியங்களின் விலை உயர்ந்து வருவது குறித்து யாரும் அஞ்ச வேண்டியதில்லையாம்! விலை ஏறுவது வழக்கமானதுதானும்! உணவுப் பங்கீடு, கட்டாயக் கொள்முதல் போன்ற முறைகளை ஏற்படுத்தப் போவதில்லையாம்!

"தென்னிந்தியாவின் உணவுப் பற்ருக்குறை முழுவதையும் இறக்குமதி செய்யப்படும் தானியத்தைக் கொண்டே இந்திய அரசாங்கம் நிச்சயமாகச் சமாளித்து விடும்," என்று மத்திய அரசாங்க உணவு இலாகா உதவி அமைச்சர் கூறியுள்ளார்.

இந்த இலட்சணத்தில்........!

தென்னட்டுமாநிலங்களின் உணவுத் தேவையை உடனுக்குடன் கவனித்து ஆவன செய்வதற்கு சென்னை - ஐதராபாத் - பெங்களூர் ஆகியவற்றுள் ஒன்றில், உணவுக்கான ஒரு தலைமைக் காரியாலயம் அமைப்பது பற்றி டில்லி சர்க்கார் ஆலோசனை செய்து வருகிறதாம். இப்பகுதியில் 5 இலட்சம் டன் அரிசியைக் கையிருப்பில் வைத்துக் கொள்ள சர்க்கார் விரும்புகிறதாம்.

140 ஓராசிரியர் பள்ளிகள் திறக்கப்படுமாம்!

திருநெல்வேலி மாவட்டத்தில் 140 ஓராசிரியர் துவக்கப் பள்ளிகள் திறப்பதற்கு சென்னை அரசாங்கம் அனுமதியளித்திருப்பதாகத் தெரிகிறது.

500 பேர் அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் உள்ளதும், ஒரு மைல் சுற்று வட்டாரத்தில் பள்ளிகள் இல்லாததுமான கிராமத்தில் இந்த துவக்கப் பள்ளிகள் ஆரம்பிக்கப்படுமாம்.

வேறு மொழிக்கு ஆதரவாக அரசியல் சட்டத்தைத் திருத்தக்கூடாதாம்!

இந்திப் பிரச்சார நிறுவனத்தின் மொழிவெறி

"இந்திதான் தேசிய மொழியாகயிருக்க முடியும் என்பதால், வேறு எந்த மொழிக்கும் ஆதரவளித்து, இந்திய அரசியல் சட்டத்தைத் திருத்தக்கூடாது"

என்று, ஜெய்ப்பூரில் நடைபெற்ற அனைத்திந்திய ராஷ்டிர பாஷா பிரச்சார சம்மேளனத்தின் இறுதிக் கூட்டத்தில் ஓர் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

ஆங்கிலத்தை, உயர்தரப் பள்ளிகளில கட்டாயமாக்க வேண்டுமென்றும், கல்லூரிகளில் போதனமொழியாக்க வேண்டுமென்றும் அண்மையில் நடைபெற்ற மாநிலக் கல்வி அமைச்சர்கள் மாநாட்டில் செய்யப்பட்ட முடிவும் எதிர்க்கப்பட்டுள்ளது.

"கல்வி அமைச்சர்கள் மாநாட்டின் முடிவுகளில கண்டுள்ள கொள்கை, மொழிப் பிரச்சினை சம்பந்தமாக அரசியல் அமைப்புச் சட்டத்தில் தொவிக்கப்பட்டுள்ள கருத்துக்களுக்கு முரணக இருக்கின்றன; அது மட்டுமல்ல; கல்வியைப் பரப்பும் பிரச்சினையிலும் தீங்குடையதாக இருக்கிறது" என்று, சம்மேளனம் நிறைவேற்றியுள்ள தீர்மானம் கூறுகிறது.

காமராசர்கள் காணட்டும்!

இலங்கையிலிருந்து வரும் அகதிகள்

மலையாள மக்களுக்குப் புனர்வாழ்வளிப்பதில் பலரும் அக்கரை காட்டுகின்றனர்

சென்னை, அக். 22—

நாடற்றவர்கள் என்று பழிக்கப்பட்டு இலங்கையிலிருந்து துரத்தப்படுகிற திராவிடர்களில், மலையாள மக்களுக்குப் புனர்வாழ்வுதர வேண்டும் என்பதில் அந்தப் பகுதியினர் காட்டிவரும் அக்கரையை, இந்த மாநிலத்தில், மக்களை மக்கள் என்று எண்ணிப்பார்க்கத் தெரியாத காமராசர்களின் கவனத்திற்குக் கொண்டுவருகிறோம்.

'இலங்கையிலிருந்து கேரளம் திரும்பக்கூடிய மலையாளிகள் சுமார் 45,000 பேர்தான் இருப்பார்கள்' என்று, முன்னாள் முதன் மந்திரி பனம்பள்ளி கோவிந்த மேனன் கூறியிருந்தார்.

அவர்களுக்கு வாழ்வு தருவதற்கென டில்லி சர்க்கார் ஒரு தனி இலாகாவையே துவக்கவேண்டும் என்று அண்மையில் கேரளத்தில் நடைபெற்ற மாநாடு ஒன்றில் காங்கிரசாரேகூடக் கோரினர்.

இப்போது மலபார் மாவட்டத்தைச் சேர்ந்த கொல்லங்கோடு மகாராஜா சுமார் 45,000 ஏகர் நிலம்வரை, இலங்கையிலிருந்து திரும்பிவருபவர்களுக்கு வாழ்வு தருவதற்காகத் தாத்தயாராக இருப்பதாக அறிவித்திருக்கிறார்

இந்த நிலத்திற்கு சர்க்கார் ரொக்கமாகப் பணம் தரத்தேவை இல்லை என்றும், கடன் பத்திரங்களாகத் தரலாம் என்றும் எனவே, சர்க்கார் இந்த நிலத்தினை சுலபமாக வாங்கி இலங்கை அகதிகளுக்கு வழங்கலாம் என்றும் அவர் கூறியிருக்கிறார் எனத் தெரிகிறது.

கொல்லங்கோடு ராஜா வி. ராமவர்மன் தம்பன் வழங்கும் இந்த நிலம், இரப்பர் பயிரிடுவதற்குச் செழிப்பானதாகும் என்றும் கூறப்படுகிறது.

சுயராஜ்யத்தின் பெயரால் சுரண்டும் நிலைமையா?

புதுடில்லி, அக். 20—

புதுடில்லி பஸ் போக்கு-வரத்து நிர்வாகத்தின் கணக்குப் பரிசீலனை முடிவடைந்துள்ளது.

தனியார்களிடமிருந்து வாங்கப் பட்ட பஸ்களுக்கும் ரூ 20இலட்சம் அதிகமாகக் கொடுக்கப்பட்டிருப்பதாகக் கமிட்டி சுட்டிக் காட்டியுள்ளது.

பல பஸ்கள் முன்னறிவிப்பின்றியும், ஏலத்திற்கு விடாமலும் விரும்பியவர்களுக்கு உரிய மதிப்புக்குக் குறைவாகவே விற்கப்பட்டுள்ளன என்றும் கமிட்டி குறிப்பிட்டுள்ளது.

குமரிமுனைக்கு ரயில் வசதி-டில்லி கைவிரிப்பு

'விரும்புகிறேன்; ஆனால் முடியவில்லை' என்கிறார் டில்லி மந்திரி

மதுரை, அக் 23—

"இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் 850 மைல் நீளமுள்ள இரயில்பாதை அமைப்பதற்குத் திட்டமிடப்பட்டிருக்கிறது; ஆனால் அது, நாட்டிலுள்ள எஃகு இயந்திரசாலைகளின் தேவைகளையும் கனரகத் தொழிற்சாலைகளின் தேவைகளையுமே பூர்த்தி செய்வதாக இருக்கும்.

"திருநெல்வேலியிலிருந்து கன்னியாகுமரி முனை வரையிலும் புதிய இரயில் பாதையை அமைக்க நான் விரும்பியபோதிலும் தற்போதைய சூழ்நிலை அதற்கு இடமளிக்கவில்லை"

இவ்வாறு, மதுரை—இராமநாதபுரம் வர்த்தக சபையின் சார்பில், 'திருநெல்வேலி — கன்னியாகுமரி போன்ற பின்தங்கிய பகுதிகளுக்கு இரயில்வே பாதை அமைப்பதற்கு முற்றிலும் எந்தவிதமான வசதியும் செய்யப்படவில்லை; இப்பகுதிகள் முன்னேற்றம் காணுவதற்குப் புதிய பல இரயில்வே பாதைகள் திறப்பது அவசியமாகும்,' என்று குறிப்பிட்டுத் தரப்பட்ட மனுவிற்குப் பதிலளிக்கையில், டில்லி இரயில்வே அமைச்சர் லால்பகதூர் சாஸ்திரி குறிப்பிட்டுள்ளார்.

"புதிய இரயில்வே பாதைகள் அமைப்பதற்கு வேண்டிய நிதியைத் திரட்டுவதற்காகப் பல வழிகள் காணப்படவேண்டும்; எனவே, மக்கள் இரயில்வேக் கட்டணங்களை அதிகம் தருவதற்குத்தயாராக இருக்க வேண்டும்; அத்துடன் 'கூட்ஸ்' சாமான்களுக்கான கட்டண விகிதங்களும் சிறிது உயர்த்தப்படலாம்," என்றும் அந்த அமைச்சர் தெரிவித்தார்.

4,000 ஆண்டுகளாக உள்ள மரம்!

உலகிலேயே மிக வயதான மரங்கள் அமெரிக்காவில் கலிபோர்னியா காட்டிலுள்ளனவாம்! மலை உச்சியில் உள்ள இந்த மரங்கள் 4,000 ஆண்டுகளாக உள்ளனவாம்! இம்மாதிரி வயதான மரங்கள் வேறு எங்கும் இல்லையாம்!

இந்தியாவில் ஆகாரப்பள்ளிக்கூடங்களின் எண்ணிக்கை 1950-51-ல் 33,730 ஆக இருந்தது 1955—56-ல் 41,124 ஆக அதிகரித்தது.

எல்லாத் துறைகளிலும் உ. பி.-க்கே முதல் இடம்

புதிய மாநில அமைப்பிற்குப் பின்னும் நிலைமை நீடிக்கும்

புதுடில்லி, அக். 23—

நவம்பர் முதல் தேதியன்று புதிய மாநிலப் பிரிவினை ஏற்படப் போகிறதல்லவா? பிரிவினைக்குப் பிறகு, விவசாயப் பொருளாதாரத் துறையில் ஏற்படும் மாறுதல் பற்றி பரிசீலனை செய்யப்பட்டு அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பரிசீலனையின்படி, புதிய பம்பாய் மாநிலத்தில்தான் விவசாய நிலங்களின் பரப்பளவு அதிகமாக இருக்கும்; அங்கு 583 இலட்சம் ஏக்கரிலும், உ. பி.-யில் 406 இலட்சம் ஏக்கரிலும், மத்தியப் பிரதேசத்தில் 393 இலட்சம் ஏக்கரிலும் ஆந்திராவில் 253 இலட்சம் ஏக்கரிலும் விவசாயம் நடைபெறும்.

1955—56-ம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்குப்படி நவதானிய உற்பத்தியைப் பொறுத்தவரையில் உத்திரப் பிரதேசத்தில்தான் அதிகப்படியான புன்செய் தானியங்கள் உற்பத்தியாகும்.

உத்திரப் பிரதேசத்தில் 88 இலட்சம் டன்; பம்பாயில் 62 இலட்சம் டன்; மத்தியப் பிரதேசத்தில் 58 இலட்சம் டன்; ஆந்திரத்தில் 52 இலட்சம் டன் நவதானியங்கள் உற்பத்தியாகும்.

அடுத்த புதிய மாநில அமைப்புக்குப் பிறகு தலைக்கு எத்தனை ஏக்கர் என்று கணக்குப் பார்த்தால், இராஜஸ்தானில் தலைக்கு 5.32 ஏக்கர் வருகிறதாம். அடுத்து மத்தியப் பிரதேசத்தில் 4.19; பம்பாயில் 2.54; மைசூரில் 2.44; ஆந்திராவில் 2.16 ஏக்கர்கள் இருக்கிறது.

புதிய மாநில அமைப்பில் பம்பாய் 1,90,919 சதுர மைல்கள் பரப்பளவு உள்ளதாக இருக்கிறது; மத்தியப் பிரதேசம் 1,71,201 சதுர மைல்கள்; இராஜஸ்தான் 1,32,078 சதுர மைல்கள்; உத்திரப்பிரதேசம் 1,13,409 சதுர மைல்கள்; ஆந்திரம் 1,05,962 சதுர மைல்கள்.

மக்கள் தொகை

உத்திரப் பிரதேசத்தில் 632 இலட்சம் மக்களும், பம்பாயில் 483 இலட்சம் மக்களும், பீகாரில் 388 இலட்சம் மக்களும், ஆந்திரத்தில் 313 இலட்சம் மக்களும் 1951-ம் ஆண்டில் எடுக்கப்பட்ட மக்கள் தொகை கணக்குப்படி வாழ்வதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

விவசாயத்தில் ஈடுபட்டுள்ள மக்கள் தொகையை எடுத்துக்கொண்டாலும் உத்திரப் பிரதேசமே முதன்மை வகிக்கிறது.

சகோதர நாட்டின் விடுதலைக்கு மொராக்கோ, டுனீஷியா முயற்சி

சகோதர நாடான அல்ஜீரியாவிற்குச் சுதந்திரம் கிடைக்க வேண்டும் என்பதில் இயற்கையான ஆசை கொண்டுள்ள நிலையில், அண்மையில் சுதந்திரம் பெற்ற டுனீஷியாவும் மொராக்கோவும் சில முயற்சிகளை மேற்கொண்டுள்ளன.

மொராக்கோ சுல்தானான சிதி முகம்மது பென் யூசுப், டுனீஷியப் பிரதமர் எம். ஹபீப் பர்கூபாவுடன் அல்ஜீரியா பற்றி முக்கியமான பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்காக ரபாட்டிலிருந்து டுனிஸ் வந்துள்ளார்.

இதற்கிடையில், சுதந்திரம் பெற்ற மொராக்கோவுடன் தமது எதிர்கால உறவுகள் எப்படி இருக்க வேண்டும் என்பதை வரையறுப்பதற்காகப் பிரெஞ்சு சர்க்கார் மொராக்கோ சர்க்காருடன் நடத்தி வந்த பேச்சு வார்த்தைகளை நிறுத்தி வைத்திருப்பதாகவும் தெரியவருகிறது.

ஊருக்கொரு பேச்சும், உருப்படாத ஆட்சியும்!

மதுரை, அக் 20—

"திருநெல்வேலியிலிருந்து கன்னியாகுமரி முனைவரையிலும் புதிய இரயில் பாதையை விரிவுபடுத்த நாங்கள் விரும்பிய போதிலும், தற்போதைய சூழ்நிலை அதற்கு இடமளிக்கவில்லை."

—இந்திய அரசாங்க இரயில்வே அமைச்சர் — ('த. நா.' 22-10-56)

திருநெல்வேலி, அக். 19—

"திருநெல்வேலியிலிருந்து கன்னியாகுமரிவரை இரயில் பாதை போடுவதற்கான போக்குவரத்து 'சர்வே' முடிந்துவிட்டது. இனி எஞ்சினீயரிங் 'சர்வே' நடத்துவதற்கு உத்திரவிடப்படும்."

—இந்திய அரசாங்க இரயில்வே அமைச்சர் — ('த. நா. '22-10-56)

கே. வி. கே. சாமி மறைவுக்கு அனுதாபம்

தூத்துக்குடி நகர செயலாளருக்கு மேலும் அனுதாபக் கடிதங்கள்

ஏற்கனவே 'நம் நாடு' இதழில் வெளியான சாமி பற்றிய அனுதாபச் செய்திகள் நீங்கலாக, மேற்கொண்டும் போளூர், இராமநாதபுரம், சிரங்கம், இலங்கை, அத்திப்பாளையம் ஆகிய தி. மு. கழகக் கிளைகள், புளியம்பட்டி எம் எஸ். இராமசாமி படிப்பகம், பிச்சனூர் பகுத்தறிவு இளைஞர் மன்றம், திருச்சி பொதுத் தொழிலாளர் சங்கம், திருச்சி கூட்டுறவுப் பால் வினியோகத் தொழிலாளர் சங்கம், பச்சையப்பன் கல்லூரி தி. மு. க. மாணவர் கிளை, திருமால்பூர் திரு. வி. க. நினைவு மன்றம் ஆகிய நிறுவனங்கள் சார்பிலும், தோழர் கணியூர் கோபால்சாமியிடமிருந்தும் தூத்துக்குடி நகரச் செயலாளர் தோழர் ஜோசப் அவர்களுக்கு சாமி மறைவு குறித்த அனுதாபக் கடிதங்கள் கிடைத்துள்ளன :—

10—10—56 மாலை 6 மணிக்கு, அருப்புக்கோட்டை தோழர் எம். எஸ். இராமசாமி அவர்கள் தூத்துக்குடி வந்து, நகரச் செயலாளர் ஜோசப், தோழர் எம். எஸ் சிவசாமி ஆகியோரைச் சந்தித்து, தோழர் சாமி கொலை செய்யப்பட்ட விவரங்களைக் கேட்டறிந்து, 11—10—56 காலை, சாமி இல்லத்திற்கும் சென்று, பின்னர் சாமியின் கல்லறைக்குச் சென்று தனது இறுதி மரியாதையைச் செலுத்திவிட்டு பகல் 2 மணிக்கு ஊர் திரும்ினார்.

இரங்கூன் :

6—10—56-ல் இரங்கூன் லான் மாடோவிலுள்ள தமிழ் படிப்பகத்தில் நடைபெற்றப் படிப்பகப் பொது உறுப்பினர் கூட்டத்தில் தோழர் சாமியின் மறைவு குறித்து ஆழ்ந்த அனுதாபம் தெரிவித்துத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

மோல்மேன் (பர்மா):

மோல்மேன் தி.மு.கழகக் கிளைத் தோழர்களும் பர்மா தி மு கழக அனுதாபிகளும் தோழர் கே. வி கே. சாமி அவர்கள் கொலை செய்யப்பட்டது குறித்துப் பெரும் துக்கம்கொண்டுள்ளனர் திராவிடப் பெருங்குடி மக்களுக்கும். தோழர் சாமியை இழந்துவாடும் அன்னார் குடும்பத்தாருக்கும் தங்கள் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கின்றனர்.

* * *

பர்மாவில் இளைஞர் எழுச்சி ஏடாகத் திகழ்கின்ற 'தந்தி' வார இதழின் ஆசிரியரான வா. து சாம்பசிவம் அவர்கள் தமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொண்டுள்ளார்.

இலங்கை :

7—10—56 மாலை, கொழும்பு நாராயணகுரு மண்டபத்தில், இலங்கை தி. மு. கழகச் சார்பில் மாபெரும் அனுதாபப் பொதுக் கூட்டம்; தோழர் இரா. அதி.மணி தலைமையில் நடைபெற்றது. இரண்டு நிமிட நேரம் மௌனத்திற்குப் பின் அனுதாபத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. தோழர்கள் சு. கா. சுந்தரராசன், அ. ம. அந்தோனிமுத்து, அ. கார்வண்ணன், ஏ. எஸ். மணவைத்தம்பி, மு க. இராசன், ஈழவரணன், மா. சே. அருள், மா.யோ.தேவதாசன், வை. மு. அழகேசன் ஆகியோர் பேசினர்.

ஜமால்பூர் (ஆமதாபாத்):

7—10—56 மாலை $5\frac{1}{2}$ மணிக்கு, ஆமதாபாத் மாவட்டக் கழகச் சார்பில், ஜமால்பூர் பழைய முனிசிபல் சாலில் தோழர் ச. சந்திரன் தலைமையில் ஓர் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. தோழர் இரா. தணிகாசலம், மற்றும் பலர் இரங்கலுரை ஆற்றினர். முத்தமிழ் நாடக மன்றத்தவர், தோழர் சாமி அவர்களின் பொது நலப் பணிகளை வில்லுப் பாட்டுகள் மூலம் விளக்கினர்.

வேடிச்சிபாளையம் :

30-9-56 மாலை தோழர் சாமி இல்லத்தில் தோழர் ச.ம. நடேசன் தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

சீலையம்பட்டி :

11—10—56ல் கிளைக் கழகச் சார்பில் மௌன ஊர்வலம் நடைபெற்று, அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

வகுரம்பட்டி :

30—9—56 இரவு 9 மணிக்கு கழக இல்லத்தில் தோழர் வ. ப. நடராசன் தலைமையில் நடைபெற்றது. அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

கடையநல்லூர் :

10—10—56 இரவு 8 மணிக்கு அசன் இப்ராகிம் மடையில் தோழர் மு. க. மஜீது தலைமையில் தி மு. கழக அனுதாபிகள்மிகுந்த அனுதாபக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர்.

கருங்கடல் :

12—10—56 இரவு 7 மணிக்கு தோழர் எஸ். இராசமணி தலைமையில் நடைபெற்ற கழகச் செயற்குழுக் கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

புலியகுளம் :

10-10-56-ல் புலியகுளம் 3-வது வட்டம் அழகிரி மன்றத்தில் தோழர் க. வெள்ளிங்கிரி தலைமையில் நடைபெற்ற இரங்கற் கூட்டத்தில் தோழர்கள் பலர் தோழர் சாமியின் தொண்டு குறித்துச் சொற்பொழிவாற்றினர்.

திருமால்பூர் :

13—10—56 மாலை 6 மணிக்கு தோழர் குமாரசாமி தலைமையில் நடைபெற்ற கிளைக் கழகச் செயற்குழுக் கூட்டத்தில் அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

கோட்டாம்பட்டி :

8—10—56ல் கிளைக் கழக இல்லத்தில் நடைபெற்ற உறுப்பினர் கூட்டத்தில், அனுதாபம் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

கோதைமங்கலம் :

30—9—56 மாலை 6 மணிக்கு தோழர் பி. ஏ. அக்கப்பன் தலைமையில் கழக இல்லத்தில் நடைபெற்றது. அனுதாபம் தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

கண்ணன்புதூர் :

30—9—56 மாலை 6 மணிக்கு கிளைக் கழகப் பணிமனையில் தோழர் சு. வன்னியப்பெருமாள் தலைமையில் நடைபெற்றது. பல கட்சித் தோழர்களும் கலந்து கொண்டனர்.

புதுக்கோட்டை :

30—9—56 இரவு $8\frac{1}{2}$ மணிக்கு தோழர் வி பி. குப்புசாமி தலைமையில். கழகப் பணிமனையில் அனுதாபக் கூட்டம் நடைபெற்றது.

தேவதானம் :

4—10—56 மாலை, கிளைக் கழகத்தில் அனுதாபப் பொதுக்கூட்டமும், பின்னர் மௌன ஊர்வலமும் நடைபெற்றது.

சிவகாசி :

5—10—56ல் சிவகாசி தி. மு. கழக உட்கிளையான பேராபட்டியில் தோழர் சா. சுப்பையா தலைமையில் அனுதாபப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் பலர் பேசினர்.

பண்டித பந்த்திற்கு டாக்டர் சுப்பராயன் சூடு!

‘எல்லைத் தகராறை மண்டலக் குழுவிடம் விடக்கூடாது’

காங்கிரஸ் மேலிடமே முயற்சிக்கலாமென்கிறார்

சென்னை, அக். 22—

“மாநிலங்களுக்கிடையே அபிவிருத்தித் திட்டங்களை வெற்றிகரமாக நிறைவேற்றுவதைக் குறித்து முடிவு செய்ய வேண்டியது மண்டல சபையின் முக்கிய வேலை; எல்லைத் தகராறுகளை மண்டல சபைக்குக் கொண்டு செல்வது மனக்கசப்பையும் விரோதத்தையுமே உண்டாக்கும்.”

என்று டாக்டர் சுப்பராயன் அவர்கள் கூறியுள்ளார்.

“சித்தூர் போராட்டப் பிரச்சினையை ஒருருடன் இணைத்துப் பேசுவது தவறானதாகும்; ஒரூரில் குறிப்பிட்ட ஒரு மொழியைப் பேசுவோரே அதிகமாக உள்ளனர் என்று கூறமுடியாத நிலையுள்ளது.

“திருத்தணி தாலுகாவில் வாழ்வோர் பெரும்பாலோர் தமிழர்; எனவே, அதைச் சுலபமாகச் சென்னையுடன் மாற்ற முடியும்.

“மற்றப் பகுதிகள் விஷயமாகக் கூட, மண்டல சபை இயங்கும் வரை காத்திருப்பது அறிவுடைமை அல்ல,” என்று அவர் கூறினார்.

மேலிடம் முயல வேண்டும்!

சென்னை—ஆந்திர மாநிலங்களுக்கிடையேயுள்ள எல்லைத் தகராறினைத் தீர்த்துவைக்கக் காங்கிரஸ் மேலிடத்திலிருந்து எவரேனும் ஒரு உறுப்பினரை அனுப்பிவைக்கலாம் என்றும் அவர் யோசனை கூறியிருக்கிறார்.

★

‘எல்லைத் தகராறுக்கு மண்டலக் குழு முடிவு காண இயலாது’

சட்டசபையில் மந்திரி சுப்பிரமணியம்

“சென்னை—ஆந்திர மாநிலங்களுக்கிடையேயுள்ள எல்லைத் தகராறினை மண்டலக் குழுவின் முடிவுக்குவிடுவதினால் எந்த விதப் பயனும் இல்லை என்று சென்னை சர்க்காருக்குத் தெரிவிக்கவிருக்கிறது.

“டில்லி மந்திரிகளில் ஒருவரே—பண்டித பந்த் போன்றவர்கள் வந்து, இரு மாநில சர்க்கார் பிரதிநிதிகளுடனும் பேச்சு வார்த்தைகள் நடத்தி, தகராறுக்கு முடிவு காணலாம் என்ற யோசனையை நான் ஏற்றுக் கொள்கிறேன்,”

என்று, மந்திரி சுப்பிரமணியம் சட்டசபையில் தெரிவித்திருக்கிறார்.

வட எல்லைத் தகராறு குறித்து, ஒருமணி நேர விவாதம் ஒன்று சட்டசபையில் நடைபெற்றது. ‘எல்லைக் கமிஷன் அமைக்க வேண்டும்’ என்ற கோரிக்கையை வலியுறுத்தி தோழர் கே. விநயகம் பேசியிருக்கிறார்.

உறுப்பினர்கள் பலரும் இந்தக் கோரிக்கையை வலியுறுத்தியிருக்கின்றனர்.

பஞ்சாங்கம் வழிகாட்டியா?

கர்னூல், அக். 22—

ஆந்திரப் பிரதேச அமைச்சரவை நவம்பர் முதல் தேதி காலை 9-30 மணிக்குப் பதவிப் பிரமாணம் செய்வதென முடிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நேரத்தைக் குறிக்க 3 மணி நேரம் விவாதம் நடத்தப்பட்டு முடிவாகக் கூட்டத்தில் ‘பஞ்சாங்கம்’ தருவிக்கப்பட்டு, புரட்டிப் புரட்டிப் பார்த்து இந்த நல்ல நேரத்தை நிர்ணயித்தனராம்!

திருமண அழைப்பு

✶

அன்புடையீர்!

26—10—56 வெள்ளி காலை 9-மணிக்கு எனக்கும், தோழியர் பரமேஸ்வரிக்கும், தஞ்சை மாவட்டம்—திருவீழிமிழலை கீழவீதியில் உள்ள மணமகள் இல்லத்தில், அண்ணா அவர்கள் தலைமையில் நடைபெறும் வாழ்க்கை ஒப்பந்த விழாவிற்கு தாங்கள் இதனையே அழைப்பாகக் கொண்டு வந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்.

சேலம்
17-10-56

அன்பன்,
வி. சிவப்பிரகாசம்

சென்னை—இராயபுரம்

சிங்காரவேலர் பகுத்தறிவு மன்றப்

பொதுக்கூட்டம்

27-10-56 மாலை 6-மணிக்கு சென்னை—இராயபுரம் அம்மன் கோவில் எதிரில் (மாதா கோவில் அருகில்) தோழர் என். சிவரத்தினம் தலைமையில் பனைமரத்தோட்டி சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் பகுத்தறிவு மன்றச் சார்பில் பொதுக்கூட்டம் நடைபெறும். அண்ணா அவர்களும், தோழர் தி. நா. மதிவாணன் ஆகியோரும் சொற்பொழிவாற்றுவர். கூட்டத்தில் தி. மு. கழகத் தேர்தல் நிதி வழங்கப்படும்.

சங்கரலிங்கனார் நினைவுநாள் பொதுக்கூட்டம்

25—10—56 மாலை 6-மணிக்கு, செங்கற்பட்டு மாவட்டம்—குன்றத்தூரில் தோழர் டி. கே. சிவகுமாரன் தலைமையில் மேற்படி கூட்டம் நடைபெறும். தோழர்கள் டி. என். சம்பந்தர், முகவை ஆர். எஸ். பாண்டியன், டி. வி. நாராயணசாமி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

பாரதி விழா

சென்னை மாகாணக் கல்லூரியில் தமிழ் மாணவர் மன்றச் சார்பில் 25—10—56 மாலை 4 மணிக்கு பாரதி விழா திரு. அ. ச. ஞானசம்மந்தம் அவர்கள் தலைமையில் நடைபெறும். திரு க. அறிவழகன் பேசுவார்.

சென்னை 2-வது வட்டத் தி. மு. க. தோழர்களுக்கு :

25—10—56 மாலை 6-மணிக்கு, இராயபுரம் மாதா கோவில் திடலில் தி. மு. கழகத் தேர்தல் ஆலோசனைக் கூட்டம் நடைபெறும்.

சென்னை 29-வது வட்டத் தி. மு. க. தோழர்களுக்கு :

26—10—56 மாலை 6-மணிக்கு, கழகப் பணிமனையில் (எண் 31, வாலர்ஸ் ரோட்) கழகப் பொது உறுப்பினர்களின் அவசரக் கூட்டம் நடைபெறும்.

சென்னை 33-வது வட்டத் தி. மு. க. தோழர்களுக்கு :

25—10—56 இரவு 7-மணிக்கு கிளைக்கழகக் கட்டிடத்தில் (செகன்னாதபுரம்—சேத்துப்பட்டு) கழகச் செயற்குழுக்கூட்டம் நடைபெறும்; அதுபோது, தேர்தல் பற்றியும், கழக ஆக்கவேலைபற்றியும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

சென்னை—வள்ளுவர் மன்றத் துவக்க விழா

26-10-56 மாலை 6 மணிக்கு, சென்னை ஓட்டேரி வாழைமா நகரில் (ஓட்டேரி தபால் நிலையம் எதிரில்) 19-வது வட்ட வள்ளுவர் மன்றத் துவக்கவிழா, தோழர் ஏ. கே. சாமி தலைமையில் நடைபெறும். தோழர் என். சிவரத்தினம் கொடியேற்றுவார்; தோழியர் சத்தியவாணி-முத்து மன்றத்தைத் திறந்துவைப்பார். தோழர் க. அன்பழகன் சிறப்புரையாற்றுவார்.

திருமணம்

26-10-56 மாலை 5 மணிக்கு, சென்னை—சேப்பாக்கம் அருணாசல ஆச்சாரிதெரு. எண்-13 இல்லத்தில், தோழர் க. அப்பாதுரை அவர்கள் தலைமையில் தோழர் எ. சாமிக்கண்ணு—தோழியர் மங்கம்மாள் திருமணம் நடைபெறும். தோழர்கள் கே. எம். கண்ணபிரான், மு புரட்சிமணி, பொ. ஏழுமலை, தோழியர் அலமேலு அப்பாதுரை ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

நெல்லை மாவட்டத் தோழர்களுக்கு:

19-10-56ல், திருநெல்வேலி-பாளையங்கோட்டையில் தேர்தல் ஆய்வுக் குழுவினரைச் சந்திக்கவந்த இடத்தில் யாரோ ஒருவர் பேனா ஒன்றைத் தவறவிட்டுச்சென்று விட்டார். அப்பேனா என்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. உரிமையுடையவர்கள் தக்க ஆதாரத்தோடு தகவல் தந்து பேனாவைப்பெற்றுச்செல்ல வேண்டுகிறேன்.

W. D. துரைசாமி
துணைச்செயலாளர்,
நெல்லை மாவட்ட தி. மு. கழகம்

தேர்தல் நிதி

20—10—56 சனிக்கிழமையன்று சென்னை திருவல்லிக்கேணியில் 41-வது வட்ட தி. மு. கழகச் சார்பில் நடைபெற்றப் பொதுக்கூட்டத்தில், அண்ணா அவர்களிடம் தி. மு. கழகத் தேர்தல் நிதிக்காக ரூ. 101 தரப்பட்டது.

—தி. மு. க. தலைமை நிலையம்

கழகக் கூட்டம்

★

திருமங்கலம் :
(மாயூரம் வட்டம்)
26—10—56 மாலை 6 மணிக்கு
தலைவர் : என். கிட்டப்பா
பேசுபவர் : அண்ணா

சர்க்கார் ஊழியர்களுக்குத் கிராக்கிப் படி உயர்வு

சீக்கிரமே சர்க்கார் முடிவு கூறுமாம்

சென்னை, அக். 23—

சர்க்கார் ஊழியர்கள் சம்பளத்தை உயர்த்துவது பற்றி ஆராய சர்க்கார் நியமித்துள்ள குழுவினர் இன்னும் சில நாட்களில் தங்கள் அறிக்கையைத் தந்துவிடுவார்கள் என்றும், சீக்கிரமே சர்க்கார் அது பற்றி ஒரு முடிவு எடுப்பார்கள் என்றும் மந்திரி சுப்பிரமணியம் சட்டசபையில் கூறியிருக்கிறார்.

‘பொதுத் தேர்தல்கள் நெருங்குவதையொட்டி, இந்த விவகாரத்தை சர்க்கார் சீக்கிரமே முடிவு செய்துவிடுமா?’ என்று, ஆர். வி. சுவாமிநாதன் என்ற காங்கிரஸ் உறுப்பினர் கேட்டபோது, ‘அது அவ்வளவு சுலபமானது அல்ல; சர்க்காருக்குப் பெரும் சிக்கஷ்டத்தை உண்டுபண்ணக் கூடியதாகும்’ என்று அந்த மந்திரி பதில் அளித்தாராம்.

‘மாநிலப் புது அமைப்பை ஒட்டி சர்க்கார் ஊழியர்களுக்கு இடைக்காலமாக ஓரளவு சம்பள உயர்வு தருவார்களா?’ என்று வேறொருவர் கேட்டபோது, ‘மாநிலப் புது அமைப்பிற்கும் இதற்கும் சம்பந்தம் எதும் இல்லை,’ என்று மந்திரி கூறியிருக்கிறார்.

‘ஓராண்டுச் சம்பளத்தை ஊழியர்களுக்குக் கடனாகத் தந்து அதனை நீண்ட காலத் தவணைகளில் திரும்பப் பெற்றுக்கொள்ளக் கூடாதா?’ என்று பாலகிருஷ்ணன் என்ற உறுப்பினர் கேட்டிருக்கிறார்.

‘இதற்கு நம்மிடம் பணம் இருக்குமென நான் கருதவில்லை’ என்று மந்திரி சுப்பிரமணியம் கூறினாராம்.

‘ஊழியர்களுக்குக் கிராக்கிப்படி உயர்வு தருவது பற்றி சர்க்கார் முடிந்த சீக்கிரம் ஒரு முடிவை மேற்கொள்ளுவார்கள்,’ என்றும் அறிவித்திருக்கிறார், மந்திரி!

இந்தியாவில் ‘மீட்டர் கேஜ்’ இரயில் பாலங்களிலேயே அலகாபாத்திற்கு அருகில் கங்கை நதி மீதுள்ள இசத் பாலம்தான் மிக அதிக நீளமுள்ளதாகும்; அதன் நீளம் 6,830 அடி.

தேர்தல் குழுவினர்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கன் ஆகிய நால்வரும் கடலூர் ‘டிராவலர்ஸ் பங்களா’விற்கு வந்து சேர்ந்தனர். மாவட்டத்திலுள்ள 14 தொகுதிகளிலிருந்து 500-க்கு மேற்பட்ட கழகப் பிரதிநிதிகளும், மற்றும் பொதுமக்களும் ஏராளமாகக் கூடியிருந்தனர். மாவட்டச் செயலாளர் எ. கோவிந்தசாமி அவர்கள் ஆய்வுக் குழுவினருக்கு மலர்மாலைகள் அணிவித்து வரவேற்றார்.

பின்னர் பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் ஆய்வுக் குழு மேற்கொண்டுள்ள பணியினையும், கழகப் பிரதிநிதிகள் தரவேண்டிய விளக்கங்களையும் விவரித்துக் கூறினார்.

அடுத்து ஆய்வுக் குழு விசாரணையைத் துவக்கியது. கடலூர், சிதம்பரம், புவனகிரி, விருத்தாசலம், நல்லூர், கள்ளக்குறிச்சி, திருக்கோயிலூர், உளுந்தூர்பேட்டை, விழுப்புரம், வானூர், செஞ்சி, சதுரங்கம், தென்டிவனம் ஆகிய தொகுதிகளிலிருந்து வந்திருந்த கழக பிரதிநிதிகள், பிரமுகர்கள் தனித்தும், ஒத்தக் கருத்துடையவர்கள் சேர்ந்தும் சாட்சியமளித்தனர். மாலை 6 மணிக்கு விசாரணை முடிவுற்றது.

ஆய்வுக் குழுவின் வருகையால் கடலூர் பெரும் பரபரப்பும் கழகத் தோழர்களிடையே புதிய தோர் ஆர்வமும் ஏற்பட்டிருக்கிறது.

பின்னர் ஆய்வுக் குழுவினர் மாலை 7 மணிக்கு நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு, 24-10-56 காலை 5 மணிக்கு புறப்பட்டுசென்னை ‘அறிவக’த்திற்கு, 9 மணிக்கு வந்து சேர்ந்தனர்.

பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் செய்த அக்கிரமம்!

அல்ஜீரியத் தலைவர்கள் நயவஞ்சகமாகக் கைது

அல்ஜியர்ஸ், அக். 23—

அல்ஜீரியத் தேசீய விடுதலை இயக்கத்தின் ஐந்து தலைவர்களை பிரெஞ்சு ஏகாதிபத்தியவாதிகள் நயவஞ்சகமாகக் கைது செய்திருக்கின்றனர் என்று தெரிய வருகிறது.

மொராக்கோ தலைநகரான ரபாட்டிலிருந்து டுனிஷியத் தலைநகரான டுனிசிற்கு, அல்ஜீரிய விடுதலை பற்றி அந்த இரு நாட்டுத் தலைவர்களும் பேச்சு வார்த்தை நடத்துவதற்காக விமானம் ஒன்றில் பறந்து சென்று கொண்டிருந்தபோது, ஆறு பிரெஞ்சு ‘ஜெட்’ விமானங்கள், வானத்திலேயே அந்த விமானத்தை முற்றுகையிட்டு, விமானத்தை அல்ஜீரிய எல்லைக்குள் திருப்புமாறு மிரட்டி நிர்ப்பந்தித்து, அல்ஜீரிய எல்லைக்குள் இறங்கச் செய்து, அதிலிருந்த 5 அல்ஜீரியத் தலைவர்களையும் கைது செய்தனராம்.

அந்த விமானத்தில் 10 பத்திரிகையாளரும் பிரயாணம் செய்தனர் என்று கூறப்படுகிறது.

டுனிசில், மொராக்கோ சுல்தான் சிதிமுகம்மது பென் யூசுபையும் டுனிஷியத் தலைவர்களையும் கண்டு பேசுவதற்காக அகமது பென்பெல்லா என்ற தேசிய விடுதலை இயக்கத் தலைவர் உட்பட 5 பேர்களும் விமானத்தில் சென்றனராம்.

இவர்கள் ஏற்கனவே, மொராக்கோ சுல்தானைச் சந்தித்து உரையாடியுள்ளனராம்.

யுத்த நிலைமை

“அல்ஜீரியத் தலைவர்கள் கைது செய்யப்பட்டிருப்பது ஆழ்ந்த கவலை தரக்கூடியது என்பதுடன் யுத்தம் மூளக்கூடிய ஒரு நிலையையும் உருவாக்கியுள்ளது” என்று டுனிஷிய அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறார்.

ஆட்சேபம்

டுனிஷிய பிரதமர் ஹபீப்பர்கூபா பிரெஞ்சு தூதவரை அழைத்து அல்ஜீரியத் தலைவர்கள் கைது செய்யப்பட்டதை எதிர்த்து ஆட்சேபக் குறிப்பொன்றைத் தந்திருக்கிறார் எனத் தெரியவருகிறது.

சொற்பயிற்சிக் கூட்டங்கள்

25-10-56 மாலை 6 மணிக்கு சென்னை 16-வது வட்ட திருவள்ளுவர் முன்னேற்றக் கழகச் சார்பில் எண்-22 தாண்டவராய பிள்ளை தெருவில், தோழர் செ. சீ. வாசன் தலைமையில், ‘போராட்டம்’ எனும் தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

ஃ ஃ ஃ

25-10-56 இரவு 7 மணியளவில் சென்னை—சூளை சௌந்திரபாண்டியனார் நினைவுப் படிப்பக மனையில், தோழர் பால்வண்ணன் தலைமையில் சொற்பயிற்சிக் கூட்டம் நடைபெறும்; ‘தேர்தலில் நம் கடமைகள்’ என்ற தலைப்பில் தோழர்கள் பலர் பேசுவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.